உ

கடவுள் துணை.

மதனசுந்தரி

ஓரடிச்சிந்து.



சென்னை:

ஸ்ரீமாதவவிலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

விலை —— பை-௩.

1905.

எய

சிவமயம்.

மதனசுந்தரி ஓரடிச்சிந்து.

---***---

டம்பாச்சாரிசொல்.

வண்டுநிகர்விழியாளே மாவமுதமொழியாளே
தண்டையணிகழலாளே தாரணிந்தக்குழலாளே
அண்டுமதன்துணையாளே அளவிலாவெழிலாளே
மண்டுநடையொயிலாளே மாகுரலிற்குயிலாளே
ஒண்டொடியேமாணிக்கமே—என்கண்ணேட்டி
உனக்கிணைசொல்வதுண்டோ.

மதனசுந்தரிசொல்.

ஆசையுள்ளக்கண்ணாளா அழகியமணவாளா
வாசமணிபுயர்தோளா வர்னசோடணிதாளா
வீசுமலர்க்கணைவேளால் வெதுப்பாதேயென்னைவாளா
ஈஸ்வரியேயென்னையாளாயென்றுநான்வெகுநாளாய்
பூசைபுரிந்தேனடா—என்கண்ணாளா
புஷ்பங்கரத்தெடுத்தே.

டம்பாச்சாரிசொல்.

வட்டமணையின்மீது திட்டமுடனிருந்து
தொட்டுகழுத்தில்தாலி கட்டியவென்னுடைய
மட்டிமனைவியெனும் தட்டிச்சனவோர்பிச்சை
கிட்டியென்காலினால் எட்டியுதைத்துத்தள்ளி
உந்தனிடம்வாழ்வதல்லால்—என்கண்ணேட்டி
யொருவருடன்வாழ்வதுண்டோ.

மதனசுந்தரிசொல்.

கலிக்கித்துராயழகும் கஸ்தூரிப்பொட்டழகும்
சிலுப்பாமினுக்கழகும் சேர்கிருதாவழகும்
தலைப்பாகையினழகும் சரிகைறுமாலழகும்
நமைமாம்வடிவழகும் நடையின்ஒயிலழகும்
கண்டபோதேயென்னுடைய—வென்கண்ணாளா
கருத்தையுருக்குதடா.

டம்பாச்சாரிசொல்.

வஞ்சியாமிளங்கொடியே மதவாரணப்பிடியே
விஞ்சுமெழிற்பைந்தொடியே மென்மருங்குற்றுடியே
நெஞ்சினிலென்றுங்குடியே நீங்குவனோநொடியே
தஞ்சமுன்மலரடியே தானடைந்தேனடியே
பஞ்சையென்மனையாளைநான்—என்கண்ணுட்டி
பறக்கவடித்திடுவேன்.

மதனசுந்தரிசொல்.

காட்டிக்கொடுத்ததெய்வம் கருணைபுரிந்ததெய்வம்
நாட்டிலுயர்ந்ததெய்வம் நலம்பெறச்செய்ததெய்வம்
பாட்டிலுயர்ந்ததெய்வம்பணிவிடைசெய்யுந்தெய்வம்
கூட்டிக்குடுத்ததெய்வம் குளிர்முகம்பார்த்ததெய்வம்
கும்பகோணத்தெய்வமல்லவா—என்கண்ணாளா
குலதெய்வம் வேறுசொல்லவா.

(டம்பன் இன்சால்மென்டாக்டினின்றுந் தப்பித்துக்
கொண்டு மதனசுந்தரிவீட்டுக்குவந்து படுத்திரு
ப்பவளையெழுப்ப, அவள் பராமுகமாயிரு
ப்பதைக்கண்டு சொல்லுதல்.)

தேசுலவுமடமானே தெவிட்டாதசெந்தேனே
ஆசையோடுதினம்நானே அடுத்தின்பஞ்செய்தேனே
வேசிகட்குளுன்னைத்தானே மேலாகநினைத்தேனே
காசினியளித்தோனே கருத்திலறிவானே

வாசமலர்க்குழன்மயிலே—குயிலே
வருத்தமென்ன தையலே.

மதனசுந்தரி தாயை அழைத்து சொல்லுதல்.

பூதலத்தனேகதவம் புரிந்தென்னைப்பெற்றவளே
காதலுடனேவளர்த்துக் கரையேற்றிவிட்டவளே
மாதாவேயாரோவோர் மனிதனருகில்வந்து
பாதாரவிந்தமதில் பணிகுவேனென்றும்
என்கண்ணேபொன்னே யெண்ணுங்கார்குயிலே
வண்ணக்கலாபமுடை மாமயிலேயென்று
மூச்சுவிடாமல் மொருகுகிறுனேரோ
காச்சல்குளிரினல் கனவருத்தமடைந்து
ஐந்தாறுநாளாக அன்னபானமில்லாமல்
சிந்தைநொந்திருக்குமிந்த ஸ்திதியினிலெந்தனுக்கு
மாப்பிள்ளையொன்றுதானோ மாநிலத்திலேகுறைவு
தாப்புள்ளசெல்வமெல்லாம் தாறுமாறுகவழித்து

வாரண்டுங்கையுமாக மாட்டிக்கொண்டிருப்பவர்க்கு
தாராண்டுங்குழலுடை தாசிவீட்டுக்கென்னவேலை
பேயனைபோகச்சொல்லடி—என்னம்மணி
பேசவும்சீவனில்லடி.

கிழவி-தெம்மாங்கு.

சவனவண்டிவுன்னைவந்து எத்துகிறமூளியவன்
தவடைதனில்போடாமல் தாமதங்கள்செய்வானேன்.

டம்பன்-சிங்காரச்சிந்து.

நா-நா-நன்னானே-நன்னானே-நன்னானே

எந்தனறுமைமாமி இன்சால்வெண்டாக்ட்டில்
எந்நுடையவல்லமையால் எளிதில்தப்பித்துவந்தேன்
சொந்தவுன்மருமகளாய் சுந்தரியோடுநான்
சொகுசாக வாழ்ந்திருப்பேன் சுகமேயினிமேலம்மா.

கிழவி-தெம்மாங்கு.

உன்னுடையவல்லமையை வுண்மையொடு சொல்வதற்கு
என்னுடையநாவாலே எவ்வளவுங்கூடுமோடா [ற்கு

அந்தமட்டுங்கெட்டிக்கார ஆண்பிள்ளைநீதானப்பா
அவனியிலுனக்கிணை யாரைசொல்லுவதப்பா
உந்தனால்நாங்கள்கண்ட தொருகோடியுண்டப்பா
உறவினிலெங்களுக்கு உதவாதுநடவப்பா   நா

டம்பன்-தெம்மாங்கு.

நன்றிகெட்டகிழப்பிணமே ஞாயமோநீங்களென்னை
தின்றுவிட்டதிரவியங்கள் செரித்ததன்றோசிந்தித்தீர்.

நாலுலட்சம்விலையுள்ள நகைகள்கொடுத்தேனே
நாலடுக்குமெத்தைவீடு நலமாயெடுத்தேனே
கோலச்சரிகைச்சேலை கொஞ்சமோவளித்தது
குணங்கெட்டிப்படிநீங்கள் கூறினும்போமோவேனோ.

கிழவி-தெம்மாங்கு.

பொறுக்கிதின்னநாயேநீ புளுகெங்கேகற்றுக்கொண் [டாய்
நறுக்கிவிடப்போறார்கள் நகைசெய்துவைத்தோர்கள்
கப்பல்துபாசியாலே காப்புக்கிடைத்ததடா
கனகராயவேளாலே கண்டிகிடைத்ததடா
அப்பாராவுவேளாலேமற்றெல்லாம்கிடைத்ததடா
அறிவுகெட்டோனேயுன்னை லணுவுமறியோமடா

டம்பன்-தெம்மாங்கு.

பலதினமுமுங்களைநான் பட்சமுடன்காத்ததெல்லா
மிலவுதனைகாத்திருந்த வேழைக்கிளிபோலாச்சே.
அன்பினிருமந்தன் அழகுமனையாளை
அரிதானபிள்ளைகளை அலையவிட்டுங்களுக்கே
இன்பமிகுமென்னாஸ்தி யெல்லாம்தொலைத்தேனே
என்னளவாகிலும்நன்றி யில்லாமற்போச்சுதே.

கிழவி-தெம்மாங்கு.

குடிக்கக்கஞ்சியில்லாத குடிகேடநாய்ப்பயலே [யலே
இடிக்கபோறேன்தாடைபார்த்தேதுங்கெட்டவெறிப
ஆருக்குன்னாஸ்தியெல்லா மளித்தாயதுவல்லாதே
ஆராலேநீயோட்டாண்டி யானையதுநீசொல்லடா

சுரும்பேனும்பிடித்த எருமைக்கடாவேயடா
எட்டாகூடம்பேசாதே எடுப்பேன்பழமுறத்தை.

டம்பன்-தெம்மாங்கு.

நான்கொடுத்ததுங்களுக்கு நாலுதலைமுறைக்குண்டே
இத்தனையுமபகரித்தே இப்படிநீயேசுகிருய்.

பத்துலட்சம்விலையுள்ள பங்களாகட்டினேன்
பகர்மெத்தையெல்லாம்குளோப்புப் படங்களாயா
எத்தனைவிதலஸ்தர் எழிலாசமாட்டினேன்[க்கினேன்
என்னபட்டுங்குடத்தி லிட்டவிளக்காச்சே.

கிழவி-தெம்மாங்கு.

சிறுக்கிதனைவசப்படுத்த சிந்தைதனி லெண்ணினையோ
செறிப்பாளோவுந்தனுக்குச் செருப்புதின்னநாய்மக

தந்ததற்கும்வந்ததற்கும் சரிப்பட்டுப்போச்சுதடா
தலைவாசல்மிதியாமல் தப்பித்துக்கொள்ளடா
சொந்தம்பாராட்டிநின்றால் சும்மாயிரேனினித்
துடைப்பக்கட்டைமுறியும் சொன்னேன்சொன்னே

தாய்க்கிழவி டம்பனுக்கு திரவியங்
கிடைத்தபின் வந்து எத்துதல்.

ஆசைமிகுமென்னுடைய அருமைமருமகனே
தேசுலவுமன்மதன்போற் சிறந்தவழகோனே
உத்தமனேசத்தியனே உலகினிற்சீமானே
மெத்தவும்புகழுடைய மேன்மைதருங்கோமானே

 மதனசுந்தரி ஓரடிச்சிந்து.

நாற்பதுசென்றுக்கால் நாய்குணமென்பார்கள்
தோத்திரையானபேய்த் தோஷிநான்தெரியாமல்
மதுவுண்டமயக்கத்தால் மதியழிந்துன்னைநான்
இதமில்லாவார்த்தைகள் எத்தனையோபேசிவிட்டேன்
உள்ளமதில்எள்ளளவு மெண்ணாமலென்னுடைய
தெள்ளுமணியாமதன சிங்காரசுந்தரியை
நித்தியமும்வைத்திருந்து நித்திலக்கழைச்சிலைக்கொள்
சித்தஜன்செருக்கொழிய சித்தமதில்சற்றுகிருபை[ன்
செய்யடாவென்சாமிகண்ணே செய்யாவிட்டாலெந்த
தையலவள்வெய்யமாரன் பெய்யுமம்பினால்நொந்து
பாரறியவுன்மீதிற் பழிபோடுவாள்சொன்னேன்
சீரிலுயர்ந்திடுசிங்கமே — தங்கமே
தேசம்புகழ்துங்கமே.

விருத்தம்.

இப்படியெத்தவந்த விதமிலாக்கிழவியோடு
மைப்படிகண்ணாளென்னு மதனசுந்தரியைடம்பன்[டு
ஒப்புக்கொள்ளாமல்நீக்கியொண்டொடிமனையாளோ
இப்படிதனிலேமிக்க விசையொடுவாழ்ந்திட்டானே.

மதனசுந்தரி ஓரடிச்சிந்து.

முற்றிற்று.